Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 01 மார்கழி (24 - 12 - 1990) திங்கட்கிழமை ஓசை 299

## தந்தையின் மிருகத்தனம்; தனயன் பரிதாப நிலையில்

(யாழ்ப்பாணம்)

ஐந்துநாள் உண்ண உணவு இல்லை; வீட்டில் இருந்த கொஞ்ச அரிசியைப் பச்சையாக வாயில் போட்ட ஐந்து வயதுச் சிறுவனை கோபம் கொண்ட தந்தை நாய்ச்சங்கிலியால் தென்னை மரத்துடன் கட்டிவைத்து வானொலி மின் இணைப்புக் கம்பியால் மிருகத்தனமாகத் தாக்கியதில் உள்ளுறுப்புகள் உட்பட உடல் முழுவதும் வீங்கிய நிலையில் யாழ் போதனா வைத்திய (4 ஆம் பக்கம் பார்க்க)

அம்பாறை மாவட்டத்தில்

# அகதிகளை முகாமில் இருந்து அதிரடிப்படை விரட்டுகின்றது!

## அகதிகள் இல்லையென கையொப்பம் இடுமாறு வற்புறுத்து

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் அகதிமுகாம்களிலுள்ள தமிழர்களைத் தமது சொந்த இடங்களுக்குச் செல்லுமாறும் தாம் அகதிகளில்லையெனக் கையொப்பம் இடுமாறும் விசேட அதிரடிப்படையினர் தமிழ் மக்களை மிரட்டி வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சம்மாந்துறை, வீரமுனை, வளத்தாப்பிட்டி, மல்வத்தை, மல்லிகைத்தீவு, சென்றல் காம்ப்சொறிக்கல்முனைபாண்டிருப்பு, கல்முனை ஆகிய இடங்களில் இருந்து வெளியேறி அக்கரைப்பற்று, திருக்கோவில், தம்பிலுவில், கோமாரி ஆகிய இடங்களில் உள்ள அகதிமுகாம்களில் உள்ள மக்களே இவ்வாறு மிரட்டப்படுவதாகத் தெரியவருகின்றது. ஆனால் இந்த அகதிகள் சென்று வாழக் கூடிய நிலையில் அவர்களது சொந்த இடங்களில் வீடுகள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் அகதி முகாம்களில் உள்ள அகதிகளை தாம் அகதிகள் அல்ல எனக் கையொப்பம் இடுமாறு விசேட அதிரடிப்படையினர் வற்புறுத்தி (4 ஆம் பக்கம் பார்க்க)

## தற்காலிக குடிசைகள் அமைக்க, தடி வெட்ட இராணுவம் தடை

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தின் பல இடங்களிலும் தங்கியிருக்கும் அகதிகள் தற்காலிக குடிசைகளை அமைக்கவும், காடுகளுக்குச் சென்று கம்பு, தடி வெட்டவும் படையினர் தடைசெய்துள்ளனர். மேலும் உணவுப் பார்சல்களோ, அல்லது தேனீரோ எடுத்துச்செல்லவும் கூட படையினர் தடுத்து வருகின்றனர். இவ்வாறான

கின்றனர். ஓரிரு உணவுப்பார்சல்களை எடுத்துச் செல்வது படையினரால் கண்டு பிடிக் (4 ஆம் பக்கம் பார்க்க)

அழகிய கிழக்கிற்கு

## உல்லாசப் பயணிகளை ஈர்க்க நடவடிக்கை எடுத்தது போதாது

(கொழும்பு)

## 1991 ஆம் ஆண்டு ஜனவரிமாதம் தமிழீழ விடுதலை மாதம்

(சென்னை)

1991 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முழுவதும் தமிழீழ விடுதலைப் போராட்ட ஆதரவு மாதமாகக் கடைப்பிடிக்குமாறு தமிழக மக்களை அனைத்துக் கட்சிக் கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

கடந்த வியாழக்கிழமை 20 ஆம் திகதி தமிழ்த்தேசிய இயக்கத்தின் தலைவர் ப.நெடுமாறன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்திற்கு 42 கட்சிகள் கலந்துகொண்டன.

1991 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தமிழீழப்போராட்டம் சம்பந்தமான பொதுக் கூட்டங்கள், கவியரங்குகள் மற் (4 ஆம் பக்கம் பார்க்க)

இந்திய விஞ்ஞானிகள் சாதனை

## இயற்கை வாயுவிலிருந்து டீசல், மண்ணெய் தயாரிப்பு

(டில்லி)

இயற்கை வாயுவில் இருந்து மண்ணெண்ணெயும், டீசலும் தயாரிக்கும் புதிய தொழில்

கண்டுபிடிப்பு இரசாயன விஞ்ஞான ஆய்வில் மிக முக்கியமான சாதனையாகும் குறிப்பாக வளைகுடா நெருக்கடி

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தின் பல இடங்களிலும் தங்கியிருக்கும் அகதிகள் தற்காலிக குடிசைகளை அமைக்கவும், காடுகளுக்குச் சென்று கம்பு, தடி வெட்டவும் படையினர் தடைசெய்துள்ளனர். மேலும் உணவுப் பார்சல்களோ, அல்லது தேனீரோ எடுத்துச்செல்லவும் கூட படையினர் தடுத்து வருகின்றனர். இவ்வாறான செயற்பாடுகளால் தூர இடங்களில்வயல்களுக்கு வேலைக்கு செல்பவர்களும், கால்நடைகளை மேய்ச்சல் நிலங்களுக்கு அழைத்துச் செல்வோரும் கூடப் பெரிதும் துன்பப்படுகின்றனர். ஓரிரு உணவுப்பார்சல்களை எடுத்துச் செல்வது படையினரால் கண்டு பிடிக்

(4ஆம் பக்கம் பார்க்க)

மேலும் அகதி முகாம்களில் உள்ள அகதிகளை தாம் அகதிகள் அல்ல எனக் கையொப்பம் இடுமாறு விசேட அதிரடிப்படையினர் வற்புறுத்தி

(4 ஆம் பக்கம் பார்க்க)

அழகிய கிழக்கிற்கு

# உல்லாசப் பயணிகளை ஈர்க்க நடவடிக்கை எடுத்தது போதாது

- பிரின்ஸ் காசிநாதர்

(கொழும்பு)

அழகிய கிழக்குக் கரையோரத்தில் உல்லாசப் பிரயாணிகளின் கவனத்தை ஈர்க்கக் கூடிய வகையிலான போதுமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லையென மட்டக்களப்பு மாவட்டத் தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி. பிரின்ஸ் காசிநாதர் அமைச்சர் பாராளுமன்றத்தில் கூறியுள்ளார்.

மேலும் அவர் பேசுகையில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

இந்திய விஞ்ஞானிகள் சாதனை

# இயற்கை வாயுவிலிருந்து டீசல், மண்ணெய் தயாரிப்பு

(டில்லி)

இயற்கை வாயுவில் இருந்து மண்ணெண்ணெயும், டீசலும் தயாரிக்கும் புதிய தொழில் நுட்பம் ஒன்றை இந்திய விஞ்ஞான இரசாயன ஆய்வு விஞ்ஞானிகள் இருவர் கண்டுபிடித்துள்ளனர். பெருமளவில் எளிதாகக் கிடைக்கும் இயற்கைவாயுவைப் பயன்படுத்தி செயற்கை முறையில் டீசலும், மண்ணெண்ணெயும் தயாரிக்கும் இக்கண்டுபிடிப்பு இரசாயன விஞ்ஞான ஆய்வில் மிக முக்கியமான சாதனையாகும் குறிப்பாக வளைகுடா நெருக்கடியின் வாயிலாக எரிபொருள் தட்டுப்பாடு தோன்றுமா என உலகம் ஐயுறும் இக்கால கட்டத்தில் இந்தக் கண்டுபிடிப்பு வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகும். இக்கண்டுபிடிப்பின் மூலம் தயாரிக்கப்படும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

புலிகளுக்கு எதிராகப் போரிட

# ஆறு வாரத்திற்கு ஒரு முறை 5000 பேரை அனுப்புகிறோம்

- ரஞ்சன்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக செயற்பட ஆறு வாரத்திற்கு ஒரு முறை 5000 பேர் பயிற்சி அளிக்கப்பட்டு அனுப்பப்படுகின்றனர் என சிறிலங்காவின் பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் இடம் பெற்ற ஐக்கிய தேசியக்கட்சியின் நிர்வாகக்குழுக் கூட்டத்தில் வடக்கு கிழக்கு நிலைமை பற்றிக் கூறும்போது

(4ஆம் பக்கம் பார்க்க)

# மதத்தை அபின் என்போருக்கு தலதாவில் என்ன வேலை?

- ரஞ்சன்

(கொழும்பு)

சமசமாஜ கம்யூனிஸ்ட் தலைவர்கள் அபிஷேக தேடி தலதா மாளிகைக்குச் சென்றார்கள் என்று பாராளுமன்றத்தில் அமைச்சர் ரஞ்சன் விஜயரட்ண கூறியுள்ளார். மேலும் அவர் பேசுகையில் அபின் கிடைக்காதமையினால் 'பிக்கட்டிங்' இல்ஈடுபட்டதாக குறிப்பிட்டு மதத்தை அபின் என்று கூறுவோருக்கு தலதா மாளிகையில் என்ன வேலை என்றும் கேள்வி எழுப்பினார்.

இதனிடையில் பொருள் விலை உயர்வு, அடக்குமுறை, மக்கள் மயமாக்கல் ஆகியவற்றை எதிர்க்க அமைதியாக பிக்கட்டிங் நடவடிக்கையில் ஈடுபட்டோர் மீது கண்டியில் நடத்தப்பட்ட தாக்குதலை அடிப்படை மனித உரிமைகளுக்கான பாராளுமன்றக் குழு வன்மையாகக் கண்டித்துள்ளது.

# வடக்கில் நேற்று முன்தினம் 15 இராணுவம் மாண்டது

- பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

வலிகாமம் வடக்கில் நேற்று முன்தினம் இடம் பெற்ற தாக்குதலில் ஒன்பது இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக சிறிலங்கா இராணுவ தலைமைப்பீடம் அறிவித்துள்ளது. மேலும் தேசிய வனவிலங்குச் சரணாலயமான வில்பத்துக் காட்டுப் பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த இரு சிறிலங்கா இராணுவத்தினர் விடுதலைப் புலிகளால் சுட்டுக் கொல்லப் பட்டிருப்பதாகவும் நேற்று முன்தினம் மன்னார்

(4 ஆம் பக்கம் பார்க்க)

சுன்னாகத்தில் இன்று

# போராளிகள் புகழுடம்பு அஞ்சலிக்கு! இராணுவத்தின் சடலம் பார்வைக்கு!

(யாழ்ப்பாணம்)

மாங்குளம் இராணுவ முகாம் தகர்ப்பின் வெற்றி நாளான நேற்று முன்தினம் சனிக்கிழமையன்று கட்டுவனில் இருந்து வெளியேற முற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீர மரணமடைந்த கப்டன் அஜிதா (கந்தையா சுகுணராணி பெரியரசடி, சங்கத்தானை, சாவகச்சேரி), கப்டன் ஆஷா (நடராஜா பத்மாவதி அரியாலை), நதிகலா (கனகரத்தினம் சுகந்தினி குடத்தனை), ரமா (சிதம்பரப்பிள்ளை லோகேஸ்வரி புதுக்குடியிருப்பு), சாம்ஸன்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# தனியாக வந்த அதிகாரி புலிகள் தாக்குதலுக்கு பலி

(மணலாறு)

மணலாறு மாவட்டத்தில் ஜீப்பொன்றில் தன்னந்தனியாக வந்த இராணுவ அதிகாரி ஒருவர் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் உயிரிழந்தார். அவரிடமிருந்த ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது: நேற்று முன்தினம் காலை 8 30 மணியளவில் மணலாறு மாவட்டத்தில் உள்ள முந்திரிகைக்குளம்பகுதியில் ஜீப்வண்டியொன்றில்தனியாக வந்த இராணுவஅதிகாரி ஒருவர்மீது விடுதலைப்புலிகள்

(4ஆம் பக்கம் பார்க்க)

# நாயன்மார்கட்டில் போராளிகளுக்கு அஞ்சலி

கட்டுவன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் நேற்று முன்தினம் ஏற்பட்ட நேரடிமோதலில் வீரமரணமடைந்த அரியாலைப் பகுதியைச்சேர்ந்த வீரவேங்கைகள் கப்டன் ஆஷா (நடராஜா பத்மாவதி) ஸ்ராலின் (துரைரட்ணம் பகீரதன்) ஆகியோர

(4ஆம் பக்கம் பார்க்க)

பனங்காமம் பற்று ப. நோ. கூ. சங்கம்
வவுனிக்குளம்

## பதவி வெற்றிடம்
## பொது முகாமையாளர் தரம் III

மேற்காண் பதவிக்கு விண்ணப்பங்கள் இலங்கைப் பிரஜைகளிடமிருந்து கோரப்படுகின்றது. விண்ணப்பங்கள் யாவும் சொந்தக் கையெழுத்தில் தயாரிக்கப்பட்டு 31-1-1991ஆம் திகதிக்கு முன்னதாக "தலைவர் பனங்காமம் பற்று ப.நோ.கூ.சங்கம் - வவுனிக்குளம்" என்ற விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்ப தபால் மேலுறையின் இடது பக்க மேல் மூலையில் "பொது முகாமையாளர் தரம் III பதவிக்கான விண்ணப்பம்" என குறிப்பிடப்பட வேண்டும்.

கல்வித் தகைமைகள் தொடர்பாகவும் வேறு மேலதிக விபரங்களுக்கும் கூட்டுறவு வேலையாளர் அணைக்குழுவின் சுற்று நிருப இலக்கம் 108/8 ஐ அருகில் உள்ள கூட்டுறவுச் சங்கத்தில் பார்வையிட்டு அறிந்து கொள்ளலாம் கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு சுற்று நிருபத்திற்கமைவாக பிணை செலுத்தப்பட வேண்டும்.

சம்பளம்:- ரூ. 1105 — 2170 / 60x4 — 75x11

வயது:- 23க்கும் 50க்கும் இடைப்பட்டதாக இருக்க வேண்டும்.

குறிப்பு:- வேதனத்துடன் கூட்டுறவு ஊழியர்களுக்கு வழங்கப்படும் சகல படிகளும் வழங்கப்படும்.

கூட்டுறவு சேவையிலுள்ள
சு. புண்ணியசிங்கம்
தலைவர்

(R-957)

---

## குத்தகை விளம்பரம்
## வலிகாமம் தெற்கு பிரதேச சபை
### கேள்வி அறிவித்தல் - 1991

எமது 24.11.90 ஆந் திகதியிடப்பட்ட கேள்வி அறிவித்தலில் குறிக்கப்பட்ட குத்தகைகளுக்கான கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி 28.12.90 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிவரையும், கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி 27.12.90 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிவரையும் நீடிக்கப் பட்டுள்ளது.

ஏனைய விபரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

வே. வீரபத்திரபிள்ளை
விசேட ஆணையாளர்,
வலி - தெற்கு பிரதேச சபை

வலி - தெற்கு பிரதேச சபை
சுன்னாகம்.
21-12-90

(B-1760)

---

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலகில் 27 - 03 - 1967



விண்ணுலகில் 21 - 12 - 1987

வீரவேங்கை
## சுப்பிரமணியம் தவேந்திரன்
(ரவி) ஏழாலை.

மங்காத புகழுடைய தமிழ்த் தாய்தன்னை
மானமுடன் வாழவைத்து மனத்திடத்தால்
செங்கோலும் வெண்குடையும் உலகம் போற்றச்
சிறப்புடனே புலிக்கொடியும் தாங்கி அன்னை
வெங்கோலர் கையினின்றும் மீண்டும் இந்த
வையகத்தில் தலை நிமிர்ந்து நிற்கவென்று
பொங்கி வந்த தாகத்தால் களம்புகுந்த
மாவீரன் தவேந்திரனே உன்னை
நித்தம் போற்றுகின்றோம்.

தாய், தந்தை, சகோதரர்கள்,
மைத்துனர், மருமக்கள், நண்பர்கள்.
ஏழாலை.

(B. 1757)

---

## விளம்பரம்

### விற்பனைக்கு

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) "மண்டேலா ரேடர்" இல. 356A பருத்தித்துறை வீதி, நல்லூர். "சரஸ்வதிவுவியகம்" 146 கஸ்தூரியார் சந்தை, யாழ்ப்பாணம். (R-888)

---

### டில்கா வாச் வேக்ஸ்
### DILKA WATCH WORKS

வாடிக்கையாளர்களுக்கு! எமது ஸ்தாபனம் மீண்டும் 404, ஆஸ்பத்திரி வீதி, பஸ் நிலையம் முன்பாகவும், மானிப்பாய் வீதி ஆனைக் கோட்டையிலும் இல,3 சித்தங்கேணி றோட், பண்டத்தரிப்பிலும் இயங்குகின்றது. சகல மணிக்கூடுகளும் றேடியோக்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலக்ரோனிக் பற்றறிகளும் விற்பனைக்கு உண்டு. (-5514)

---

### யாழ்ஸ் றெஸ்ரோறன்ற்

வாடிக்கையாளர்களே! முதலாம் ஒழுங்கை, பலாலி வீதி, யாழ்ப்பாணம் (ஆரிய குளம்) எனும் முகவரியில் இயங்கி வந்த எமது றெஸ்ற்ரோறன்ற் தற்போது இல.59, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்குகிறது என்பதை அறியத் தருகின்றோம். (200 யார் தூரத்தில்)

(B- 1742)

---

### கோழி இறைச்சி

நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு கோழி இறைச்சி விற்கப்படும். நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தை, நல்லூர். (R/ 964)

---

### விற்பனைக்கு

கல்வியின் உளவியல் அடிப்படைகள் By S. சந்தானம் (Phychological Foundations of Education) விலை ரூபா 148/25 விற்பனையாளர் பூபாலசிங்கம் புத்தகசாலை (நகுலினி) யாழ்ப்பாணம். (B/ 1719)

---

### தேவை

ஆங்கிலம், தமிழ் சுருக்கெழுத்து தெரிந்த ரைப்பிஸ்ட் 40 வயதிற்கு மேற்பட்டவர்கள் தேவை, விண்ணப்பிக்கவும்: மே/பா ஈழநாதம், விளம்பர இலக்கம் 105 31மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். (R-963)

---

### மலிவு 31 வரை மட்டும்

நீடிக்கப்படமாட்டாது.மீரா வெளியீடுகளாக வெளிவந்த உயிரோட்டமான நாவல்கள் 100/- ரூபாவுக்கு புத்தகங்கள் வாங்குபவர்களுக்கு 40/- ரூபாவுக்கு புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகிறது. துர்க்கா ஸ்ரேசனேர்ஸ் சுன்னாகம், திருக்கணிதம் சாவகச்சேரி, ஸ்ரீகாந்புத்தகசாலை நல்லூர். (R/ 965)

---

### கஜு விற்பனை

எம்மிடம் கஜு மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புகள்:-

மொத்த விற்பனைக் களஞ்சியம், கிராம சபைஅலுவலகம் முன்பாக, ஆடிய பாதம் வீதி, கொக்குவில்
(B/1758)

---

## தேவை
### பண்ணைப் பொறுப்பாளர்

பிரபல நிறுவனமொன்றினால் நிறுவப்படவிருக்கும் விவசாய பண்ணைகளுக்கு பொறுப்பாக செயல்பட, விவசாய பட்டதாரிகள் தேவை. குடாநாட்டிலும், வெளிமாவட்டங்களிலும் பணியாற்ற ஆயத்தமாக இருக்க வேண்டும். தகுதியுள்ளவர்கள் தங்கள் சுய விபரக் கோவையுடன் 31-12-90க்கு முன் விண்ணப்பிக்கவும்.

மே/பா ஈழநாதம்
விளம்பர இல. 104
31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். (B-1759)

---

## அரசாங்க அறிவித்தல்
### சுகாதாரத் திணைக்களம்
### யாழ்ப்பாணம் பெரும்பாகம்

1991 ஆம் ஆண்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கும் தெல்லிப்பளை, சாவகச்சேரி, கிளிநொச்சி ஊர்காவற்றுறை, புங்குடுதீவு, நெடுந்தீவு ஆகிய மாவட்ட வைத்தியசாலைகளுக்கும் அழுக்குத் துணி சலவை செய்வதற்காக கேள்விகள் 1991 ஆம் ஆண்டு ஜனவரி 10 ஆம் திகதி (10. 01. 91) முற்பகல் 10 மணி வரை சுகாதார சேவைகள் திணைக்களம், யாழ்ப்பாணம் அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலதிக விபரங்கள் அறிய விரும்புவோர் இக்காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

டாக்டர். ந. கனகசபை
சுகாதாரசேவைகள் பிராந்திய பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

(B 1756)

---

## ராஜா காமென்ற்ஸ்

ராஜா காமென்ற்ஸ் ஸ்தாபனத்தாரின் நம்பிக்கை திறன் கூடிய தரமான றெடிமேற் ஆடைத் தினுசுகள் இன்றைய நவநாகரிக முறைகளில்

❋ ஆடவர் ❋ நங்கையர் ❋ மழலைகள்

அனைவரின் தேவைக்குகந்த வகையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

(வியாபாரிகளுக்கு விஷேட கழிவுண்டு)

விபரங்கட்கு:
யோகாஸ் புடைவை மாளிகை
இல. 16, பெரியகடை.

குமார் புடைவை மாளிகை
முத்திரைச் சந்தி,
நல்லூர்.

(B-1655)

---

## 6-ம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில் 10 — 06 — 1957



தாயக விடிவில் 24 — 12 — 1984

## லெப்டினன்ட்காண்டீபன்(எம்.பி)
(விஞ்ஞானபீட மாணவன்)

சுப்பிரமணியம் ஸ்ரீஸ்கந்தராசா
(முன்னாள் மாணவரவைத் தலைவர்
யாழ். பல்கலைக்கழகம்)

குமுளமுனை,
முல்லைத்தீவு.

யாழ். பல்கலைக்கழக
மாணவர்கள்

(B/1765)

## சிந்தனைக்கு

உம் தலையில் ஏம்பம்போல் நாக்கு இருக்கிறது. கவனமாய் இருங்கள். அது உம் தொண்டையையே அறுத்துவிடக்கூடும்.

— எஸ். கே. பெரேல்மேன்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 24-12-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 8208
த.பெ.எண் 03


# வீடெரிப்பானாம் இராசா தீ கொடுக்கும் சேவகன்

வடக்கு கிழக்கு புனர்வாழ்வுப் பணிகளுக்கு சிறிலங்கா அரசாங்கத்தின் ஊடாகவே உதவி வழங்கப்படல் வேண்டும் என பிரிட்டிஷ் அரசாங்கத்தைக் கோரும் கடிதம் ஒன்றை பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு ஈ.பி.டி.பி. குழுவினர் அனுப்பி வைத்துள்ளனர்.

ஆங்கிலேயர் இலங்கையை விட்டுச் சென்ற பின்னர் ஆட்சிக்கு வந்த சிறிலங்கா ஆட்சியாளர் பொதுவாகவே வடக்கு கிழக்கு அபிவிருத்தியைப் புறக்கணித்தே வந்தனர். இதனால் இலங்கையில் வளர்ச்சி அபிவிருத்தி ஒரு சமனற்ற பரம்பல் கொண்டதாகவே ஏற்பட்டு வந்தது. குறிப்பாக கைத்தொழில் தொடக்கம் சேவைத்துறை வரை இந்தச் சமனற்ற அபிவிருத்திப் பரம்பல் காணப்பட்டது. இதனால் தென்பகுதியைவிட வடக்கு கிழக்கு பின்தங்கியே இருந்து வந்தது.

அதேவேளை, அபிவிருத்தி என்ற போர்வையில் சிங்கள அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் அனைத்தும் தமிழரின் பிரதேசத்தை ஆக்கிரமிக்கும் நடவடிக்கையாகவும், வடக்கு கிழக்கில் இன விகிதாசாரத்தைமாற்றும்நடவடிக்கையாகவுமே இருந்தும்வந்தது. விவசாய அபிவிருத்தி என்ற போர்வையில் சிங்கள குடியேற்றங்கள் நிறுவப்பட்டன. கைத்தொழில் அபிவிருத்தி என்ற போர்வையில் சிங்கள குடியிருப்புகள் உருவாக்கப் பட்டன. அதாவது வடக்கு கிழக்கு அபிவிருத்தி நிதி சிங்களவருடனேயே வடக்கு கிழக்கிற்கு வந்தது.

இதேபோன்றே இயற்கை அழிவுகள், யுத்த அழிவுகள் என்பனவற்றிற்கு உலக நாடுகளினால் வழங்கப்பட்ட புனர்நிர்மாண, புனர்வாழ்விற்கான நிதிகளும் இன ரீதியாகவே வழங்கப்பட்டன. எடுத்துக்காட்டாக 1978 ஆம் ஆண்டு மட்டக்களப்பைத் தாக்கிய சூறாவளியினால் ஏற்பட்ட அழிவிற்கு வழங்கப்பட்ட நிதியைக் குறிப்பிடலாம். சூறாவளியால் தாக்கப்பட்ட தமிழரை விட தாக்கப்படாத சிங்களவர் அனுபவித்ததே அதிகமானதாகும். அதாவது வடக்கு கிழக்கு புனர்நிர்மாணம், புனர்வாழ்வு என்பது அங்குள்ள (குடியேற்றப்பட்டவர்கள்) சிங்களவரின் அபிவிருத்தி என்பதே அரசாங்கத்தின் கோட்பாடாகும்.

கடந்த காலத்தில் இது தொடர்பாக பலமான குற்றச்சாட்டுகள் சிறிலங்கா அரசாங்கத்தின் மீது சுமத்தப்பட்டு வந்ததோடு தமிழர் தரப்பில் இருந்து தமக்கு நேரடியான உதவி வழங்கப்பட வேண்டும் என கோரிக்கைகள் நீண்டகாலமாக விடுக்கப்பட்டு வந்தன.

இந்த நிலையில், அரசாங்கத்தின் செயற்பாடுகள் குறித்தும தமிழர் புறக்கணிக்கப்படுகின்றனர் என்ற குற்றச்சாட்டில் உள்ள உண்மையினையும் சில நாடுகள் உணர்ந்து முழு அளவில் இல்லாவிடினும் சிறிய அளவில் அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலம் உதவி வழங்க இன்று முன்வந்துள்ளன. சில நாடுகள் வழங்கியும் உள்ளன.

இதேவேளை இன்று வடக்கு கிழக்கில் ஏற்பட்ட யுத்தத்தினால் தமிழரின் சொந்த முயற்சியினால் கட்டி எழுப்பப்பட்ட பொருளாதாரம் சிறிலங்கா அரசபடையால் அழிக்கப்பட்டுவிட்டது. கடந்த ஆறு மாத காலத்தில் 500 கோடி ரூபாவிற்கு மேல் செலவு செய்து அதைப் போல் பல மடங்கு பொருளாதார அழிவை ஏற்படுத்திவிட்டது.

இந்த நிலையில், அரசாங்கத்திற்கு ஊடாகவே தமிழ்ப் பகுதி புனர்வாழ்வு புனர்நிர்மாணத்திற்கு நிதி வழங்க வேண்டும் என ஈ.பி.டி.பி பிரிட்டிஷ் அரசாங்கத்தைக் கோரியுள்ளது. உண்மையில் இது ஈ.பி.டி.பியின் சொந்தமான எண்ணமாக இருக்கமுடியாது. இது சிறிலங்கா அரசாங்கத்தின் திட்டமிட்ட செயலாகும்.

இன்று சிறிலங்கா அரசாங்கம் பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ளது. இதனை அரசாங்கமே வெளிப்படையாக ஒத்துக் கொண்டுள்ளது. இந்த நிலையில் கடந்த காலத்தில் சிறிலங்கா அரசாங்கம் அபிவிருத்தி நிதிகளை யுத்த தளபாட கொள்வனவிற்குப் பாவித்தமையும், தொடர்ச்சியாக அரசினால் மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்களும் வெளிநாட்டு உதவிகளையும் கேள்விக்குரியதாக்கியுள்ளது.

இந்த நிலையில் தனது நிதிவளத்தைப் பெருக்க அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கையின் ஒரு பகுதியே இதுவாகும். இதனை அரசாங்கம் அரச சார்பற்ற நிறுவனங்கள் மீது மேற்கொண்டுள்ள ஆணைக்குழு விசாரணையின் மூலமே விளங்கிக்கொள்ளலாம்.

ஆகவே ஈ.பி.டி.பியின் இந்தக் கோரிக்கை இவர்களின் சொந்தமான கோரிக்கை இல்லை. இதன் பின்னணியில் சிறிலங்கா அரசாங்கத்தின் பெரிய நிதி தேடலுக்கான திட்டமே அடங்கியுள்ளது. இதனை ஈ.பி.டி.பியினர் புரிந்தார்களோ தெரியாது. ஏனெனில் அவர்கள் ஒருபோதும் சொந்தக்காலில் நின்றதில்லை; நிற்கவும் அவர்களால் முடியாது.

# நெருப்புக்காய்ச்சலும் தடுப்பு முறைகளும்

நெருப்புக் காய்ச்சல் என்பது 'சல்மோனெல்லா டைபி' (Salmonella Typhy) என்கிற பக்றீரியாவினால் ஏற்படுகின்ற காய்ச்சலாகும்.

இந்நோய்க் கிருமிகள் பின்வரும் முறைகளில் மனிதனுக்குத் தொற்றுகின்றன.

(1) குடிக்கின்ற நீர்

(2) உண்ணுகின்ற உணவு

எனவே வாய்த்துவாரத்தின் மூலம் இந்நோய்க் கிருமிகள் பரவுகின்றன.

இந்நோய்க் கிருமிகள் உட்சென்றதும் உணவுக்கால்வாயிலுள்ள 'சிறுகுடலில்தான் 'பேயர்ஸ் பச்சஸ்' (Bayer's Patches) குவிந்து பின்பு பெருகுகின்றன. வாய்னூடாக உட்சென்ற சல்மோனெல்லா கிருமிகள் பேயாஸ் பச்சஸில் குவிந்து பன்மடங்காக பெருகுவதற்குரிய காலம் நோய் அரும்புகாலம், 'இன்குப்பசன் பீரியட்' (Incubation Period) என்பார்கள். இது ஏறக்குறைய ஏழு நாட்களாகும்.

இதன்போது நோய்க்கான பின்வரும் அறிகுறிகள் தெரியும்.

(1) காய்ச்சல் இடைவிட்டு இடைவிட்டு காயும்.

(2) தலையிடி அதுவும் தலையின் முன் பகுதி இடிக்கும்

(3) மேல் முழுவதும் உளையும்.

(4) சிலருக்கு வாந்தியிருக்கும்.

(5) பசியிருக்காது.

(6) மலச்சிக்கல் சிலருக்கு ஏற்படும்.

இந்த ஏழு நாட்களுக்குள் நோயின் அறிகுறி ஆரம்பமானவுடனேயே அருகிலுள்ள ஆஸ்பத்திரிக்குச்சென்று ஆலோசனைபெற்று அதற்குரிய மருந்தைக்குடிக்க ஆரம்பித்தால் நோயை வெகுவாகக் கட்டுப்படுத்தலாம்.

இதனை உதாசீனம் செய்தால் அடுத்துவரும் ஒரு கிழமையில், 'பேயாஸ்பச்சஸில்' பெருகிய நோய்க்கிருமிகள் மீண்டும் இரத்தோட்டத்தில் கலந்து உடலின் சகல உறுப்புகளுக்கும் பரவும். இதனால் பின்வரும் பிரச்சினைகள் ஏற்படலாம்.

(1) உணவுக் கால்வாயின் சிறுகுடலின் உட்பகுதியில் சிதைவுகள் ஏற்பட்டு மலத்துடன் இரத்தமும் வெளியேறும்.

(2) உணவுக்குழாயின் சிறுகுடலில் சிதைவுகள் ஏற்பட்டு கிழிசல் ஏற்படும். இதனால் சடுதியான மரணம் கூட ஏற்படலாம்.

(3) ஈரலில் சிதழ் பிடிக்கலாம். இதனால் செங்கமாரி வந்து ஈரலின் தொழிற்படும் திறன் குறையலாம்.

(4) மூளையில் மூளைக் காய்ச்சலை ஏற்படுத்தலாம்.

(5) எலும்புகளைத் தாக்கலாம்.

இன்னும் பல பிரச்சினைகள் ஏற்பட்டு இறுதியில் மரணம் ஏற்படும்.

## தடுகக சில வழிமுறைகள்

(1) குடிக்கின்ற தண்ணீர் மூலம் இந்த நோய் பரவுவதால் அதுவும் குறிப்பாக மழைகாலங்களில் கிணற்றுநீர் அசுத்தமாக இருப்பதால் தண்ணீரை நன்கு கொதிக்க வைத்து ஆறியபின்னரே குடிக்கவேண்டும்.

(2) சமையலுக்குரிய மரக்கறிகள், கீரைகளை நன்கு கழுவவேண்டும்.

(3) சாப்பிடமுன்னர் கைகளை சவர்க்காரம் போட்டு நன்கு கழுவவேண்டும்.

(4) மலம் கழித்த பின்னரும் கைகளை நன்கு சவர்க்காரம் போட்டு கழுவவேண்டும்.

(5) கைகளிலுள்ள நகங்களை வெட்டி நன்கு சுத்தமாக வைத்திருக்கவேண்டும்.

(6) வெளியிடங்களில் மலம் கழிக்கக்கூடாது. மலசலகூடங்களையே உபயோகிக்கவேண்டும்.

(7) ஏற்கனவே இந்தநோய் தொற்றியவரை தனிமைப்படுத்துவது மிகவும் நன்று. அவருக்குரிய குடிநீர் குவளைகள், சாப்பிடுகிற பாத்திரம் என்பவற்றை பிறர் உபயோகிக்கக்கூடாது.

(8) நோய் ஏற்பட்டவர் மலம்கழிக்க மலசலகூடத்தையே அவசியம் உபயோகப்படுத்தவேண்டும்.

(9) நோய் ஏற்பட்டவர் சமையல் வேலைகளிலோ, பிறருடைய உணவுப்பண்டங்களை கையாளுவதையோ முற்றாகத் தவிர்க்கவேண்டும்.

(10) குறிப்பாக உணவுச் சாலைகள், சாப்பாட்டுக் கடைகளில் சமையல் செய்பவர்கள், மரக்கறி, மீன், இறைச்சி விற்பவர்கள், பால் விற்பவர்கள், பலருக்கு உணவு பரிமாறுபவர்கள் ஆகியோருக்கு இந்த நோய் ஏற்பட்டால் இவர்கள் தற்காலிகமாக உடனடியாக தமது வேலைகளை நிறுத்திக்கொள்ளவேண்டும்.

நோய்க்குரிய ஆலோசனைகளை அருகிலுள்ள ஆஸ்பத்திரிகளில் மேலும் பெற்று பொருத்தமான மருந்தை காலதாமதம் இல்லாமல் எடுக்கவேண்டும்.

-டாக்டர் சிர்மாறன்

தென்மராட்சி அகதிகள் நிவாரணக்கழகம்

# 1243 அகதிக்குடும்பங்களுக்கு நிவாரண உதவி வழங்குகிறது

(தென்மராட்சி)

சிறிலங்காவின் முப்படைகளின் தாக்குதல்கள் காரணமாக பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து தென்மராட்சிப் பகுதியில் தஞ்சம் அடைந்துள்ள 1243 குடும்பங்களைச் சேர்ந்த 5,310 பேர்களுக்கும், தென்மராட்சி அகதிகள் நிவாரணக் கழகம் உதவிகள் வழங்கி வருகின்றது. இப்பகுதியில் 19 அகதி முகாம்களில் திருக்கோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த 106 குடும்பங்களும் இருக்கின்றன. பொதுஸ்தாபனங்களின் உதவியுடன் அகதிகளைப் பராமரித்து வருவதாகவும், சொந்த இடங்களுக்கு மீண்டும் செல்ல முடியாதிருப்பவர்களுக்கு காணி, வீடு, தொழிலவாய்ப்பு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுவதாகவும் தெரிய வருகின்றது.

# 3சைக்கிள் திருட்டு

(வட்டுக்கோட்டை)

யாழ்ப்பாணக் கல்லூரியின் சைக்கிள் பாதுகாப்பில் இருந்த மூன்று சைக்கிள்கள் கடந்த வாரத்தில் திருடப் பட்டுள்ளன.

இத்திருட்டில் சம்பந்தப்பட்ட இரு இளைஞரும் பொதுமக்களால் பிடிக்கப் பட்டு வட்டுக்கோட்டை விடுதலைப் புலிகள் பிரதேசக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ச)

# பலாலி ஆசிரியர் கலாசாலையில் செய்முறை வசதிகள் இல்லை

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் இயங்கிவரும் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் விஞ்ஞானம், விவசாயம் போன்ற பாடங்களுக்குரிய செய்முறைப் பாடத்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு போதியவசதிகள் இல்லை.

மேற்படி இரு பாடங்களுக்குரிய செய்முறைப் பயிற்சியை பெறுவதற்குரிய எவ்வித விவசாய உபகரணங்கள், விஞ்ஞான ஆய்வு கூடங்கள் எதுவும் அற்ற நிலை இங்கு நிலவுகிறது.

மேலும் இந்த ஆசிரியப் பயிற்சிக்கலாசாலையில் நூல் நிலையம், விளையாட்டு மைதானம் போன்ற வசதிகளும் இல்லை. இதனால் இங்கு பயிலும் மாணவர்கள் பூரண பயிற்சியைப் பெற்றுக்கொள்வது மிகவும் சிரமமாக உள்ளது. (க)

# ஓய்வூதியக்காரர்களுக்கும் விசேட அலவன்ஸ் தொகை

(கொழும்பு)

நவம்பர் முதலாம் திகதி தொடக்கம் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வரும் விசேட அலவன்ஸ் தொகை அடுத்தமாதம் முதல் ஓய்வூதியக்காரர்களுக்கும்விஸ்தரிக்கப்படவுள்ளது.

நவம்பர், டிசம்பர் மாதங்களுக்கான இந்த அலவன்ஸ் ஜனவரி மாத ஓய்வூதியத்துடன் சேர்த்து வழங்கப்பட இருக்கின்றது என ஓய்வூதியத் திணைக்களப் பணிப்பாளர் தகவல் தெரிவித்துள்ளார்.

# 84 லட். டாலர் சிறிலங்காவிற்கு ஐரோ. பொருளாதார சமூகம் உதவி

(பிரசல்ஸ்)

ஐரோப்பிய சமூகம் 84 லட்சம் டொலர் நிதி உதவியை இலங்கைக்கு வழங்க முன் வந்துள்ளது. வடக்குப் பகுதியிலுள்ள சிறிய குளங்களைப் புனரமைக்கவும், நீர்ப்பாசனத் திட்டங்களைச் செம்மைப்படுத்தவும் பயன்படுத்தப்படவென இத் தொகை வழங்கப் பட்டிருக்கின்றது ஐரோப்பிய சமூகம் பிரசல்ஸில் நேற்று முன் தினம் இந்த உதவி பற்றி அறிவித்தது.

இந்தியா, பங்களாதேஷ், பிலிப்பைன்ஸ் நாடுகளுக்கும் மொத்தம் பத்துக்கோடி டொலர் பெறுமதியான நிதி உதவி வழங்க ஐரோப்பிய சமூகம் தீர்மானித்துள்ளது. நீர்ப்பாசனம், வெள்ளத்தடுப்பு வேலைகளுக்கு இந்த நிதி உதவி பயன்படுத்தப்படும்.

# இடமாற்றம்

சாவகச்சேரி நவீன சந்தை மேல்மாடியில் இயங்கி வந்த மக்கள் வங்கி அலுவலகம், சாவகச்சேரியில் செயலிழந்திருக்கும் பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் உள்ள ஒரு வீட்டிற்கு இடம் மாற்றப் பட்டுள்ளது.

ஆறுமாத இராணுவ நடவடிக்கையால்

# மயிலிட்டியில் 35 கோடிக்குமேல் சேதம்; 28 பேர் பலி, 3 பேர் ஊனம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அரசபடைகளின் நடவடிக்கைகளால் கடந்த ஆறுமாதகாலத்தில் மயிலிட்டி கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கு, 35 கோடியே 01 லட்சத்து 3000 ரூபா சேதமேற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் கடற்றொழிலாளர்களில் 28 பேர் பலியாகியுள்ளனர், மூவர் ஊனமுற்றுள்ளனர், ஒருவர் காணாமல் போயுள்ளார்.

மயிலிட்டி கிராமிய கடற்றொழில் சமூக அபிவிருத்தி அமைப்புத் திரட்டிய மதிப்பீட்டின் போது இந்தச் சேத விபரங்கள் தெரியவந்துள்ளன.

மயிலிட்டிப் பகுதியில் இரண்டாயிரம் கடற்றொழிலாளர் குடும்பங்கள் இருந்த போதிலும் இதுவரை 750 குடும்பங்களின் உடைமைகளுக்கு ஏற்பட்டுள்ள சேதவிபரங்களே மேற்குறிப்பிட்டவையாகும்.

கடந்த 15-6-90க்குப் பின்னர் சிறிலங்கா அரச படைகளின் நடவடிக்கைகளினால் இரண்டாயிரம் குடும்பங்களும் இடம்பெயர்ந்து யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் தஞ்சம் புகுந்திருப்பதால் முழுமையாக சேதவிபரங்கள் பெறமுடியவில்லை என்று மேற்குறிப்பிட்ட அமைப்புத் தெரிவிக்கிறது.

கடற்றொழிலாளரின் வள்ளங்கள் (மரவள்ளம், பிளாஸ்டிக், கட்டுமரம்), வலைகள், தொழில்தள பாடங்கள், என்ஜின்கள் (யம்மர், 3 சிலிண்டர், 2 சிலிண்டர், யமகா ஜோன்சன், எவன்ரூட், வெளி இணைப்பு இயந்திரங்கள்), இழுவைப்படகுகள், தொழில் உடைமைகள், வீடுகள் ஆகியனவற்றின் சேத மதிப்பீடு 17 கோடியே 31 லட்சத்து 3000 ரூபா எனவும்.

கடற்றொழிலோடு சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகள் மீன்பதனிடும் தொழிற்சாலைகள் 03, உப்பு அரைக்கும் தொழிற்சாலைகள் 07, வர்த்தக நிலையங்கள் 20, விறகு காலைகள் 03, எரிபொருள்கள் நிரப்பும் நிலையம் 02, மரம் அரியும் தொழிற்சாலைகள் 07 மற்றும் இந்து ஆலயங்கள் 15, கிறிஸ்தவ தேவாலயங்கள் 03 ஆகியனவற்றின் சேத மதிப்பீடு 17 கோடியே 70 லட்சம் ரூபா எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

## முதல்வர் கோரிக்கை ஆளுநரால் நிராகரிப்பு

(பாண்டிச்சேரி)

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் பெரும்பான்மை வலுவை நிரூபிக்க சட்டப் பேரவையை கூட்ட வேண்டும் என முதலமைச்சர் டி. ராமச்சந்திரனின் கோரிக்கையை புதுச்சேரி துணைநிலை ஆளுநர் ஹர்ஸ்வருப்சிங் நிராகரித்துள்ளார்.

இன்று மாலைக்குள் தமது எம். எல். ஏக்களை கொண்டு வந்துகாட்டவேண்டுமென்றும் அல்லது அவர்களது சம்மதக் கடிதங்களை வாங்கிவந்து தமது பெரும்பான்மை வலுவை நிரூபிக்க வேண்டுமென்றும் துணைநிலை ஆளுநர் முதலமைச்சர் டி. ராமச்சந்திரனை கேட்டுள்ளார்.

ஆனால் முதலமைச்சர் டி. ராமச்சந்திரன் இதனை எதிர்த்து கடிதம் ஒன்றை துணைஆளுநருக்கு எழுதியுள்ளார். இதில் அவர் தம்முடைய குறிப்பிட்டது போல இந்த மாதம் 26 ஆம் திகதி அன்று அமைச்சரவை பெற்றுள்ள பெரும்பான்மை வலுவை சட்ட பேரவையில் நிரூபிக்கத் தயார் என கூறியுள்ளார்.

அதனுடன் எம். எல். ஏக்கள் சிலர் மிகவும் தொலைவில் உள்ள இடங்களில் வசிப்பதால் அவர்களை நேரில் அழைத்து வந்து காட்டுவது நடைமுறைக்கு சாத்தியமல்ல என்றும் கூறி இதனை நிராகரித்துள்ளார்.

இதனிடையே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த 3 சட்டப் பேரவை உறுப்பினர்கள் டி. ராமச்சந்திரன் தலைமையிலான அரசாங்கத்தை பதவி நீக்கம் செய்வதைத் தவிர துணைநிலை ஆளுநருக்கு வேறு வழியில்லை எனத் தெரிவித்துள்ளனர்.

தனியாக

தாக்குதல் மேற்கொண்டனர்; இத்தாக்குதலால் அவர் ஓட்டிவந்த ஜீப்வண்டி சேதமாக்கப்பட்டது. பிறெனின் பிஸ்டல் 1, மகசீன் 2, 9 எம் எம் 38 மெகசின் ஜெப் என்பன புலிகளால் கைப்பற்றப்பட்டன. இந்தச் சம்பவத்தை இராணுவத் தலைமையகம் சொழும்பில வார்ஜிதம் செய்தது. (மு)

## மாங்குளம் இராணுவ முகாமில் கைப்பற்றப்பட்டவையில் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

மாங்குளம் இராணுவ முகாமில் கைப்பற்றப்பட்டதாக முன்னர் வெளிவந்த அறிக்கையில் சிறு மாற்றங்கள் உள்ளதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதன் பிரகாரம் மாங்குளம் இராணுவமுகாமில் கைப்பற்றப்பட்ட ஒரு கவச வாகனம், இரண்டு ட்ரக் வண்டிகள், இரண்டு ஜீப்வண்டிகள் என்பன முன்னைய அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை எனவும், கைப்பற்றப்பட்ட ஆயுதங்களில் மேலும் பல மாற்றங்கள் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாணவர் இயக்கத்தைக் கட்டிய மேஜர் முரளியின் நினைவுநாள்

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தைக் கட்டியெழுப்பதில் பெரும் பங்காற்றிய மேஜர் முரளியின் நினைவு தினம் நேற்றாகும். மரணித்த மாவீரர் வரிசையில் மாணவர் அமைப்பைச் சார்ந்தவர்களின் பங்களிப்பு முக்கியமானதாகும். இவர்களை நினைவு கூர்ந்து மாணவர் எழுச்சிநாளும் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது, நினைவு அஞ்சலிக் கூட்டங்கள் ஊர்வலங்கள், சிரமதானங்கள், நூலகம், பாலர் பாடசாலைத் திறப்பு பல்கலைக்கழக மாணவர்களின் இரத்த தானம், முதலியபல்வேறு நிகழ்ச்சிகள் தமிழீழப்பகுதிகளில் நேற்று இடம் பெற்றன. (மு)

தற்காலிக

கப்பட்டால் பயங்கர சித்திரவதைகளுக்கு இலக்காகும் பரிதாப நிலைஏற்படுகின்றது.

இது இவ்விதமிருக்க கடைவீதிகளுக்கு பண்டங்களை வாங்கச் செலலும் தமிழ் மக்களை முஸ்லிம்கள் அம்பாறை மாவட்டத்தைவிட்டு விரட்டப்போவதாக மிரட்டி வருகின்றனராம்.

தந்தையின்

சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.


சுழிபுரம் பகுதியைச்சேர்ந்த நாகராசா விஜயக்குமார் என்ற ஐந்து வயதுச் சிறுவனையே அவனுடைய தந்தையார் இந்தகதிக்குள்ளாக்கினார்.

போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் பேசுவதற்கும் திராணியற்ற நிலையில கிடக்கும் இந்தச் சிறுவன் தனது வீவகப்போனவயினூடாகச் சொன்ன தகவல்களே இவை. அவன் தனது தந்தையைப் பற்றிக் கூறிய போது. தினமும் தனது தந்தையார் மூக்குமுட்ட குடித்துவிட்டுவீட்டில் கலாட்டா பண்ணுவதாகவும். அம்மாவும்

போராளிகள்

(செல்வநாயகம் ஜெயசந்திரன் ஏழலை), ஸ்ராலின் (துரைரட்ணம் பகீரதன் அரியாலை), அலன் (குருசாமி ஜீவராசா விசுவமடு,முல்லைத்தீவு) ஆகியோரின் புகழுடல்கள் இன்று காலை ஆறுமணி தொடக்கம் பத்துமணிவரை பொதுமக்களின் அஞ்சலிக்காக சுன்னாகம் சந்தை மைதானத்தில் வைக்கப்படும்.

இந்தவீர வேங்கைகளினால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களும், சிறிலங்கா இராணுவத்தின் சடலமொன்றும் பொதுமக்களின் பார்வைக்காகஇங்கு வைக்கப்படவுள்ளது. (மு)



ஒரு மாதத்தின் பின்னர்

## வள்ளம் சிதைந்தநிலையில் மீட்பு மீனவரைக் காணவில்லை

(குருநகர்)

குடாக் கடலில் வைத்து கடந்த மாதம் 30 ஆம் திகதி மூன்று மீனவர்களுடன்காணாமல்போன "சுசிக்குமார்" என்னும் பிளாஸ்டிக் வள்ளம் நேற்று (23-12-1990) பாலைதீவுக்கு அண்மையில் சிதைந்த நிலையில் காணப்பட்டு உரிமையாளரால் மீட்டுக் கொண்டு வரப்பட்டுள்ளது.

வள்ளத்தில் சென்ற குருநகரைச் சேர்ந்த இராசதுரை கனகு (வயது 52), டேவிட் ரமேஷ் (வயது 25), தம்பித்துரை பொன்ராசா (வயது18) ஆகிய மூன்று மீனவர்களின் நிலை என்னவென்று இன்னமும் உறுதிப்படுத்த முடியவில்லை.

குண்டுத்தாக்குதலுக்கு உட்பட்டதற்கான அடையாளங்கள் வள்ளத்தில் காணப்படுகின்றன. (21)

## மேலும் ஒரு கைத்துப்பாக்கி

(பூநகரி)

பூநகரிக்கோட்டையில் மீண்டும் ஒரு கைத்துப்பாக்கியும், ஒரு இராணுவத் தொப்பியும் லொறி உரிமையாளரால் மீட்கப்பட்டு பூநகரி பள்ளமடுப் பிரதேசப் பொறுப்பாளர் திரு கு. சாம் அவர்களிடம் ஒப்படைத்துள்ளார். (71)

## கப்பல் திரும்பியது

(யாழ்ப்பாணம்)

காலநிலை சரியில்லை என்று காரணம் கூறித் திருக்கோணமலை போன கப்பல் திரும்பி வந்தது.

நேற்று இந்தக் கப்பலின் வருகையைத் தொடர்ந்து யாழ். அரச அதிபர் சென்று வரவேற்றுத் திரும்பினார். (லோ)

நாயன்மார்கட்டில்

ரின் புகழுடல்கள் நேற்று நாயன்மார்கட்டு சனசமூக

நிராகரித்துள்ளார்.

இன்று மலைக்குள் தமது எம். எல். ஏ.களை கொண்டு வந்து காட்டவேண்டும் என்றும் அல்லது அவர்களது சம்மதக் கடிதங்களை வாங்கிவந்து தமது பெரும்பான்மை வலுவை நிரூபிக்க வேண்டும் என்றும் துணைநிலை ஆளுநர் முதல

அங்கீகாரமளிக்க பெற்றுள்ள பெரும்பான்மை வலுவை சட்ட பேரவையில் நிரூபிக்கத் தயார் என கூறியுள்ளார்.

அதனுடன் எம். எல். ஏக்கள் சிலர் மிகவும் தொலைவில் உள்ள இடங்களில் வசிப்பதால் அவர்களை நேரில் அழைத்து வந்து காட்டுவது நடைமுறைக்கு சாத்தியமல்ல என்றும் கூறி இதனை நிராகரித்துள்ளார்.

இதனிடையே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த 3 சட்டப் பேரவை உறுப்பினர்கள் டி. ராமச்சந்திரன் தலைமையிலான அரசாங்கத்தை பதவி நீக்கம் செய்வதைத் தவிர துணைநிலை ஆளுநருக்கு வேறு வழியில்லை எனத் தெரிவித்துள்ளனர்.

**தனியாக**

தாக்குதல் மேற்கொண்டனர். இத்தாக்குதலால் அவர் ஓட்டிவந்த ஜீப்வண்டி சேதமாக்கப்பட்டது. பிறௌனிங் பிஸ்டல் 1, மகசீன் 2, 9 எம் எம் 28, மோபைல் செற் என்பன புலிகளால் கைப்பற்றப்பட்டன. இந்தச் சம்பவத்தை இராணுவத் தலைமையகம் கொழும்பில் ஊர்ஜிதம் செய்தது. (மு)

# மாங்குளம் இராணுவ முகாமில் கைப்பற்றப்பட்டவையில் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

மாங்குளம் இராணுவ முகாமில் கைப்பற்றப்பட்டதாக முன்னர் வெளிவந்த அறிக்கையில் சிறு மாற்றங்கள் உள்ளதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதன் பிரகாரம் மாங்குளம் இராணுவமுகாமில் கைப்பற்றப்பட்ட ஒரு கவச வாகனம், இரண்டு டரக் வண்டிகள், இரண்டு ஜீப்வண்டிகள் என்பன முன்னைய அறிக்கையில் குறிப்பிடப் படவில்லை எனவும், கைப்பற்றப்பட்ட ஆயுதங்களில் கீழ் வருமாறு மாற்றங்கள் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | முன்னர் அறிவித்தவை | மீட்கப்பட்டவை |
|---|---|---|
| ★ ஏ. கே. எல்; எம். ஜி. | - 12 | 13 |
| ★ ஏ. கே. எல். எப். ஜி. | | |
| தம் ரவைக் கூடுகள் | - 30 | 37 |
| ★ ரீ 56-1 ரக துப்பாக்கி | - 16 | 17 |
| ரீ 56 ரவைக்கூடுகள் | - 114 | 127 |
| ★ ஐ எம் ரவைகள் | - 300 | 84250 |


## மரண அறிவித்தல்

### திரு. கந்தையா தம்பிமுத்து

ஊரெழு மேற்கைச் சேர்ந்த கந்தையா தம்பிமுத்து அவர்கள் 20. 12. 90 அன்று காலமானார். அன்னார் இராசமணியின் அன்புக்கணவரும், சறோஜினிதேவி, மகேஸ்வரி, சரஸ்வதி, கனகராசா, காலஞ்சென்ற குணரெத்தினம், காலஞ்சென்ற மகேந்திரன், உதயகுமார் (மஸ்கஸ்), கமலேஸ்வரி (ஆத்தை), ஆகியோரின் அன்புத்தந்தையும் செல்லம்மா, பரிபூரணம் விசுவலிங்கம், பரமநாதன், சிவக்கொழுந்து ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். சமக்கிரியைகள் 20. 12. 90 அன்று நடந்தேறின.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
மனைவி, மக்கள்

(R-967)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1990 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 24ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தைக் கட்டிவளர்ப்பதில் பெரும் பங்காற்றிய

**தற்காலிக**

கப்பட்டால் பயங்கர சித்திரவதைகளுக்கு இலக்காகும் பரிதாப நிலையேற்படுகின்றது.

இது இவ்விதமிருக்க கடைவீதிகளுக்கு பண்டங்களை வாங்கச் செல்லும் தமிழ் மக்களை முஸ்லிம்கள் அம்பாறை மாவட்டத்தைவிட்டு விரட்டப்போவதாக மிரட்டி வருகின்றனராம்.

**தந்தையின்**

சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சுழிபுரம் பகுதியைச்சேர்ந்த நாகராசா விஜயக்குமார் என்ற ஐந்து வயதுச் சிறுவனையே அவனுடைய தந்தையார் இந்தக்கதிக்குள்ளாக்கினார்.

போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் பேசுவதற்கும் திராணியற்ற நிலையில் கிடக்கும் இந்தச் சிறுவன் தனது வீடிபோன வயிறாகச் சொன்ன தகவல்களே இவை. அவன் தனது தந்தையைப் பற்றிக் கூறிய போது, தினமும் தனது தந்தையார் மூக்குமுட்ட குடித்து விட்டுவீட்டில் கலாட்டா பண்ணுவதாகவும், அம்மாவும் எனக்கு இலாததால் சமைப்பதற்கு எனது அண்ணா ஒருவனைத் தவிர வேறு எவரும் இல்லை. ஐந்து நாட்களாக எதுவித சாப்பாடும் கிடைக்கவும் இல்லை. இந்நிலைநேற்று முன்தினம் வீட்டில் எங்கோ ஒளித்து வைத்திருந்த அரிசியை எடுத்து பச்சையாகவே தின்றதாகவும் அப்போது அங்கே வந்த அப்பா தன்னை தென்னை மரத்துடன் நாய்ச் சங்கிலியால் கட்டிவிட்டு (வானொலி வயர்) மின் இணைப்புக் கம்பியால் தான் மயங்கும் வரைக்கும் அடித்ததாக அந்தச் சிறுவன் கூறினான். (லோ)

**வடகேசில்**

கஜுவத்தையில் இடம்பெற்ற மோதலில் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் உறுதிப்படுத்தி உள்ளன.

வவுனியா பம்பமடுவில் நேற்று முன்தினம் நடந்த மோதலில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேத விபரங்களை வெளியிட பாதுகாப்பு அமைச்சு மறுத்து விட்டதாக ரூபவாஹினி நேற்று மாலை அறிவித்தது.

அத்துடன் வடக்கு கிழக்கில் தொடர்ந்தும் போர் நடந்து கொண்டிருப்பதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

மேஜர் முரளியின் நினைவு தினம் நேற்றாகும். மாணிக்க மாவீரர் வரிசையில் மாணவர் அமைப்பைச் சார்ந்தவர்களின் பங்களிப்பு முக்கியமானதாகும் இவர்களை நினைவு கூர்ந்து மாணவர் எழுச்சிநாளும் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது. நினைவு அஞ்சலிக் கூட்டங்கள் ஊர்வலங்கள், சிரமதானங்கள், நூலகம், பாலர் பாடசாலைத் திறப்பு பல்கலைக்கழக மாணவர்களின் இரத்த தானம், முதலியபல்வேறு நிகழ்ச்சிகள் தமிழீழப்பகுதிகளில் நேற்று இடம் பெற்றன. (மு)

**போராளிகள்**

(செல்வநாயகம் ஜெயசந்திரன் ஏழலை), ஸ்ராலின் (துரைரட்ணம் பசிரதன் அரியாலை), அலன் (குருசாமி ஜீவராசா வீசுவமடு,முல்லைத்தீவு) ஆகியோரின் புகழுடல்கள் இன்று காலை ஆறுமணி தொடக்கம் பத்துமணிவரை பொதுமக்களின் அஞ்சலிக்காக சுன்னாகம் சந்தை மைதானத்தில் வைக்கப்படும்.

இந்த வீர வேங்கைகளினால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களும், சிறிலங்கா இராணுவத்தின் சடலமொன்றும் பொதுமக்களின் பார்வைக்காக இங்கு வைக்கப்படவுள்ளது. (மு)

**ஆறுவாரத்திற்கு**

அவர் இதனை தெரிவித்தார்.

கிழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதல் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அதனை சமாளிக்கக்கூடிய இராணுவத்தினர் அங்கு அனுப்பப்படுள்ளனர் எனவும் 6 வாரத்திற்கு ஒரு முறை 5000 பேர் இராணுவத்தில் சேர்க்கப்படுவர் எனவும் தெரிவித்தார்.

**உல்லாசப்**

உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் பல அம்சங்கள் கிழக்கில் உள்ளன. உல்லாசப்பயணிகள் எனும்போது வெள்ளைத்தோல் உடையவர்களையே எண்ணுகின்றோம். உள்நாட்டிலேயே எமது மக்கள் பல இடங்களுக்கும் சென்று பார்வையிட விரும்புவர். அவர்களைக் கவரும் வகையிலான நடவடிக்கைகளும்மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

**அகதிகளை**

வருவதாகவும் இவ்வாறு கையொப்பம் இடும் அகதிகளுக்கே ஜனசவிய உதவி வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை பொத்துவில் மக்களுக்குவழங்கப்பட்டுவந்த ஜனசவிய உதவி நிறுத்தப்பட்டுவிட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

மும் உறுதிப்படுத்த முடியவில்லை.

குண்டுத்தாக்குதலுக்கு உட்பட்டதாக அடையாளங்கள் வள்ளத்தில் காணப்படுகின்றன. (21)

## மேலும் ஒரு கைத்துப்பாக்கி

(பூநகரி)

பூநகரிக்கோட்டையில் மீண்டும் ஒரு கைத்துப்பாக்கியும், ஒரு இராணுவக் தொப்பியும் லொறி உரிமையாளரால் மீட்கப்பட்டு பூநகரி பள்ளமடு பிரதேசப் பொறுப்பாளர் திரு. சாம் அவர்களிடம் ஒப்படைத்துள்ளார். (71)

## கப்பல் திரும்பியது

(யாழ்ப்பாணம்)

காலநிலைசீர்கேடு என்ற காரணம் கூறித் திருகோணமலை போன கப்பல் திரும்பி வந்தது.

நேற்று இந்தக் கப்பலின் வருகையைத் தொடர்ந்து யாழ். அரச அதிபர் சென்று வரவேற்றுத் திரும்பினார். (லோ)

**நாயன்மார்கட்டில்**

ரின் புகழுடல்கள் நேற்று நாயன்மார்கட்டு சனசமூக நிலையம், அரியாலை சரஸ்வதி மத்திய நூல் நிலையம் ஆகிய இடங்களில் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன.

இதேதினம் பெரியரசடி சாவகச்சேரியைச் சேர்ந்த கப்டன் அஜித்தா (சுகுணராணி கந்தையா) வின் புகழுடல் இளாலி, கொடிகாமம், சுன்னாகம் ஆகிய பகுதிகளில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. இவ் வீரவேங்கைகளுக்குப் பெருந்தொகையான மக்கள் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். (11, 35, மு)

**இயற்கை**

டிசம்பர், மண்ணெண்ணெயும் இருவருடங்களில் பாவனைக்கு வரும் எனத் தெரிய வருகிறது.

**1991ஆம் ஆண்டு**

நும் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு ஆதரவு வழங்கவேண்டுமென்றும் அந்தக் கூட்டம் தமிழ்மக்களைக் கேட்டுக்கொண்டது.

அத்துடன் இலங்கையில் தமிழர் வாழும் பிரதேசங்களில் சிறிலங்கா இராணுவத்தினரின் தாக்குதல்களினால் காயமடைந்து வரும் மக்களுக்கு உதவும் முகமாக மருந்துப் பொருள்களைச் சேகரித்து அனுப்புதல் என்ற தீர்மானமும் இந்தக் கூட்டத்தினால் எடுக்கப்பட்டது.